# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 60/2023 நாள்.21.8.2025

### DW2- திரு. பிலிப் அருள்ராஜ் , த /பெ. திரு. மைக்கேல்ராஜ்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் ஆமாம். நெடுமாறன் அழைத்ததன் பேரில் சாட்சி சொல்லவந்தேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 பவர் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் ஆமாம். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பவர் பத்திரத்திற்கு கைம்மாறு தொகை எதுவும் பெறவில்லை என்ற குறிப்பு உள்ளது என்றால் ஆமாம். அவ்வாறு கையெழுத்து போடும்போது ஆட்சேபணைகள் எதுவும் ஏற்படவில்லை என்றால் ஆமாம். பவர் பத்திரம் தயார் செய்யும் சமயத்தில் நான் அங்கிருந்தேனா என்றால் இருந்தேன்.அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் ஞாபகமில்லை. காலையா, மாலையா என்றால் மதியமாக இருக்கலாம். எனக்கு வாதி பிரதிவாதிகள் எல்லாரும் எனக்கு நன்கு பரிட்சயம் ஆனவர் என்றால் ஆமாம்.என்னை சாட்சி போட அழைத்தது யார் என்றால் இருவரும் அழைத்தார்கள். எனக்கு தண்டபாணி எப்படி பழக்கம் என்றால் குடும்ப வரவு செலவுக்காக நான் அவரிடம் பணம் வாங்கியுள்ளேன் அவருக்கு இடம் விற்றுள்ளேன். தண்டபாணியிடம் சுமார் எவ்வளவு தொகை வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை. எனக்கு தண்டபாணிக்கு உள்ள வரவு செலவு முழுமையாக முடிவடையவில்லை என்றால் முடிந்துவிட்டது. எனக்கும் தண்டபாணிக்கும் வரவு செலவு முடிந்ததை காண்பிக்க என்னிடம் ஆவணம் இல்லை என்றால் ஆமாம். தண்டபாணியிடம் கடன் வாங்கும்போது அதற்கு ஆதரவாக கடனுறுதி சீட்டும் பத்திரங்களும், கையெழுத்திட்டு கொடுத்தேன் என்றால் காசோலையும் கொடுத்தேன். இடம் நான் தண்டபாணிக்கு விற்ற பிறகு எனக்கும் அவருக்கும் சுமூக உறவு இல்லை என்றால் சரியல்ல. தாவா இடம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். தாவா இடத்தை சுற்றி இருக்கும் மற்ற சொத்துக்களை கோவிந்தசாமிக்கு விற்றுள்ளேனா என்றால் விற்றுள்ளேன். அதன் அடிப்படையில் எனக்கும் கோவிந்தசாமிக்கும் நெருங்கிய உறவு என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் சொன்ன தாவா சொத்திற்கு எந்தவித தொகையும் பிரதிவாதிகளால் கொடுக்கவில்லை என்றும், கோவிந்தசாமி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எதன் அடிப்படையில் ரூ 40,00,000 நிர்ணயம் செய்யபட்டது என்று எனக்கு தெரியாது என்றால்

ஆமாம். அவ்வாறு எந்த தொகையும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும் அதனால்தான் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் தண்டபாணிக்கு கொடுக்கவேண்டிய தொகை அவர் என்னிடம் கேட்டதால் நான் பிரதிவாதிகளிடம் கைகோர்த்து இங்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.